# பத்திரிக்கை செய்திகுறிப்பு

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், தேவிரஹள்ளி கிராமம், தமிழ்செல்வன் மனைவி திருமதி.ஜி.தனலட்சுமி என்பவர் 07.05.2018 ஆம் தேதி மதியம் 12.15 மணிக்கு, கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி காவல் ஆய்வாளர் முன்பு கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவில், தனக்கும் தனது கணவர் தமிழ்செல்வனுக்கும் கருத்து வேறுபாடு இருந்துவருவதால் தன்னை கணவரோடு சேர்த்துவைக்குமாறு கிருஷ்ணகிரி சமுக நலத்துறை பாதுகாப்பு அலுவலர் திருமதி.சி.கவிதா அவர்களிடம் புகார் மனு கொடுத்திருந்ததாகவும், அந்த புகார் மனுவின் பேரில் தனது கணவரின் குடும்பத்தாரை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியதில் சுமுகமான தீர்வு ஏற்படாததால், தனது கணவர், மாமனார் மற்றும் மாமியார் மீது நீதிமன்றம் மூலமாக நடவடிக்கை எடுப்பதற்காக நீதிமன்றத்திற்கு குடும்ப வன்கொடுமை குறித்த விவகார அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்ப தன்னிடம் ரூ.4000/- லஞ்சமாக கேட்டதால் பாதுகாப்பு அலுவலர் திருமதி.கவிதா அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்தார். அவருடைய புகார் மனுவின் பேரில் கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 3/AC/2018 u/s 7 & 13(2) r/w 13(1)(d) of the Prevention of Corruption Act 1988 ன் படி குற்றவழக்கு பதிவுசெய்யப்பட்டு பொறிவைத்து பிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இன்றைய பொறிவைத்து பிடிக்கும் நிகழ்வின்போது பாதுகாப்பு அலுவலர் திருமதி.சி.கவிதா அவர்களை புகார்தாரர் திருமதி ஜி.தனலட்சுமி அவர்கள் இன்று மதியம் சந்தித்தபோது, திருமதி.சி.கவிதா அவர்கள் புகார்தாரர் திருமதி.ஜி.தனலட்சுமி அவர்களிடமிருந்து ரூ.4000/- கையூட்டாக கேட்டு பெற்றுகொண்டார். அப்போது அவர் கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் அலுவலர்களால் கையும் களவுமாக பிடிக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.